உ

சிவமயம்



வலிகாமம்

பலாலி கிழக்கு வசாவிளானை பிறப்பிடமாகவும்

மடிப்பாக்கம் சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்

# இளையதம்பி சின்னத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவுச்சுடர்

## 31-08-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம்
பலாலி கிழக்கு வசாவிளானை பிறப்பிடமாகவும்
மடிப்பாக்கம் சென்னையை வசிப்பிடமாகவும்
கொண்ட அமரர்

# இளையதம்பி சின்னத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவுச்சுடர்

**31-08-2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## வலிகாமம்

## பலாலி கிழக்கு வசாவிளானை

## பிறப்பிடமாகவும்

## மடிப்பாக்கம் சென்னையை

## வசிப்பிடமாகவும்

## கொண்ட அமரர்

# இளையதம்பி சின்னத்துரை

## அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த

# நினைவுச்சுடர்

# 31-08-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமிகு தந்தையின் இதயங்கள்
காணிக்கை



பாசமிகு தந்தையாக எங்கள்
குலம் விளங்க வைத்த வரை
வெற்றி பல கண்டே நாம்
விரைந்துயரச் செய்தவரை
என்றென்றும் எம் குலத்தின்
ஈடில்லா அப்பாவை
இன்றிங்கே இழந்து நின்று
தவியாய் தவித்தோமே.
காலமெலாம் கடமை செய்து
கலக்கமின்றி எம்மை காத்து
ஞாலத்தில் நாம் உயர
நாள் நாளும் உழைத்த அப்பா

கோலங்கொள் புகழெழுதி
குளிர்தமிழ்ப்பா மலரிதனை
பாசத் தந்தையவர்
திருமலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

**குடும்பத்தவர்**

சென்னை.
இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குல தீபமாய் நின்று
ஒளி வீசிய எம் அன்புத் தந்தை அமரர்

# இளையதம்பி சின்னத்துரை

அவர்கள்



வையகத்தில்
**1933-12-10**

வானகத்தில்
**2010-08-01**

## திதி வெண்பா

ஆண்டு விகிர்தி வருஷம் தனில் ஆடியாம் மாதமதில்
பூண்ட அபரபக்க ஸப்தமி திதி - தன்னில்
உத்தமனாம் இளையதம்பி சின்னத்துரை அரனடி சேர்ந்தார்
செம்மையாய் இவ்வுலகில் வாழ்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருமுறைப்பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கணிந்து

## தேவாரம்

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பான் அவர் சிந்தையுள்ளானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே

திருச்சிற்றம்பலம்.

## திருவாசகம்

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமையெல்லாமுங்
குன்றே அனையாய் யெனை யாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே

## திருவிசைப்பா

நீறணிபவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செயல்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேனிசையு மாறிசையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப்பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் மன்றருள் செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்குமந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம்பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகி
சோதியாயுணர்மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகித் தோன்றிய பெண்ணுமாயாணுமாகிப்
போதியாய் நிற்கும் தில்லை பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்த குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இளையதம்பி சின்னத்துரை அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தென திகழ்வதும், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததுமாகிய எமது தாய்த் திருநாடாம் இலங்கை மணித் திருநாட்டில் வடக்கே தலை போல் விளங்குவது யாழ்ப்பாணக் குடாநாடு சிவபூமி எனப் போற்றப்படும் இப்பகுதியில் பல வளங்களும் நிரம்பப் பெற்ற வலிகாமம் பகுதியில் மிக மிகப் பிரசித்தி பெற்று விளங்குவது பலாலி எனும் பேரூர் பல்லாண்டு காலமாக விமானப் படைத்தளமாக விளங்குவதுடன் கமத் தொழிலுக்கு உகந்த நீர்வளமும் நிலவளமும் மிக்கதாய் மிளகாய் புகையிலை, குரக்கன், மரவள்ளி, வெங்காயம், தக்காளி, முதலியவற்றுக்குப் பேர் பெற்றதாய் விளங்கியது. தன்னிறைவு மிக்க கிராமமாகவும், முயற்சி மிக்க மக்களைக் கொண்டதாகவும் விளங்கி தன்னிலையை நிலை நாட்டியது. இன்று அதியுயர் பாதுகாப்பு வலயமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டு நாமெல்லாம் இடம்பெயர வேண்டி ஏற்பட்டு விட்டது.

இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற பலாலியாம் ஊரிலே, அம்மன் கோயிலடி + பலாலி கிழக்கு, வசாவிளான் என்ற முகவரியுள்ள இடத்தில் உயர் சைவ வேளாண் குடியில் திருவாளர் இளையதம்பியும் அவர் மனைவி தங்கமுத்து என்னும் மாதரசியும் நல்லபடி வாழ்ந்து வந்த இல்லறத்தின் பயனாக ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். அவர்கள் முறையே செல்லையா (அமரர்) சின்னையா (அமரர்) சின்னத்துரை (அமரர்) சின்னத்தங்கம் (இலங்கை) பொன்னு (லண்டன்) பொன்னம்பலம் (இலங்கை) ஆகியோராவர் இவர்களில் இந்நூலின் பாட்டுடைத் தலைவனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குபவர் சின்னத்துரை என்பவராவர்.

அமரர் இளையதம்பி சின்னத்துரை அவர்கள் தனது அன்பான உடன் பிறப்புகளின் வழியாக முறையே பாக்கியலட்சுமி (இலங்கை) பொன்னு (இலங்கை) சின்னப்பிள்ளை (அமரர்) இராசரத்தினம் (அமரர்) இராசம்மா (இலங்கை) ஆகியோரை மைத்துனர்களாகப் பெற்றார்.

அமரர் இ. சின்னத்துரை அவர்கள் 1933 ஆம் ஆண்டு 12-ஆம் மாதம் 10-ஆம் தேதி பிறந்தார். இவர் தன் இளமைக் கல்வியை முடித்துக்கொண்டு விவசாயத்தைத் தன் தொழிலாகக் கைக்கொண்டு சீரும் சிறப்புடன் வாழ்ந்து வருங்கால், மறவன்புலவைச் சேர்ந்த திருவாளர் இரத்தினம் + முத்தாச்சி தம்பதிகளின் புதல்வி திலகவதி என்னும் நங்கை நல்லாளைத் திருமணம் செய்தார். விவாகத்தின் மூலம் மனைவியின் சகோதரர்களாகிய விநாயகமூர்த்தி (இலங்கை) நடராசா (இலங்கை) வள்ளிப்பிள்ளை (அமரர்) வெற்றிவேல் (இலங்கை) சந்திரமதி (அமரர்) இராசம்மா (இலங்கை) கைலாயபிள்ளை (இலங்கை) சிவசுப்பிரமணியம் (இலங்கை) என்னும் இவர்களை மனைவி வழி மைத்துனர்களாக்கிக்கொண்டார்.

அமரர் சின்னத்துரை அவர்களும் மனைவி திலகவதியும் நடாத்திய இல்லறமென்னும் நல்லறத்தின் பயனாக எட்டு மக்கட் செல்வங்களைப் பெற்றெடுத்தனர். இவர்களில் மூவர் ஆண்கள் ஐவர் பெண்கள். மூத்தவர் சிவயோகநாதன் என்பவர். இவர் சுதர்சினி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து நவீன் என்னும் மகனுடன் லண்டனில் வாழ்ந்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவர் சந்திரகலாதேவி என்பவர். இவர் உருத்திரசிங்கம் என்பவரைத் திருமணம் செய்து உஷாந்தன், ஐதுர்ஷா என்னும் இரண்டு பிள்ளைகளுடன் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார். மூன்றாமவர் சாந்தினிதேவி மன்மதராஜா என்பவரைத் திருமணம் புரிந்து சதுஜன், சிந்துஜன் என்னும் இரு ஆண் குழந்தைகளுடன் லண்டனில் வாழ்ந்து வருகின்றார். சசிகலாதேவி என்னும் நான்காமவர் பாஸ்கரன் என்பவரைத் திருமணம் செய்து இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்.

ஐந்தாமவர் கிரிதரன் என்பவர், நிலுஸ்ரா என்னும் பெண்ணை மணம் புரிந்து லண்டனில் வாழ்ந்து வருகின்றார். ஆறாவது பிள்ளையாகிய சத்தியதேவி ரவீந்தன் என்பவரைத் திருமணம் செய்து இந்தியாவில் வாழ்ந்து வருகின்றார். ஏழாவது எட்டாவது பிள்ளைகளாகிய தணிகைக்குமரன் என்பவரும் சசிதாதேவி என்பவரும் பெற்றாருடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கிடையில் நாட்டு நிலமை காரணமாக 1990-ம் ஆண்டு பலாலிப் பிரதேசத்தை விட்டு எல்லோருமே வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இடம் பெயர்ந்து மீசாலையிலும் பின் அச்சுவேலியிலும் தங்கியிருந்து விட்டுப் பின்னர் இந்தியாவுக்குக் குடிபெயர வேண்டி ஏற்பட்டு விட்டது. இந்தியாவில் மடிப்பாக்கம், சென்னை, இந்தியா என்னும் முகவரியில் தங்கியிருந்தனர்.

இடம் பெயர்ந்தும் குடி பெயர்ந்தும் சென்றாலும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கையில் 01-08-2010க்குச் சமனாகிய விகிர்தி வருஷம். ஆடி மாதம் அபரபக்க சப்தமி திதியும் ரேவதி நட்சத்திரமும் கூடிய முன்னிரவு 8.50 மணியளவில் அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையதம்பி சின்னத்துரை அவர்கள் இறைவனது பொற்பாதங்களைச் சென்றடைந்தார். அன்னாரது ஆத்மா இறைவன் திருவடி நிழலில் பேரானந்தப் பெருவாழ்வு பெற நாமெல்லாம் இறைவனை பிரார்த்திப்போமாக.

அதே சமயம் இங்கு இருக்கும் அவரது பிரிவால் துயரும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரும் அமைதி பெற இறையாசி வேண்டிப் பிரார்த்திப்பதுடன் அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்வோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## மனைவி புலம்பல்

இடம் பெயர்ந்த போதெல்லாம்
எம்மையும் அழைத்தே சென்றீர்
திடம் பெறும் முத்தி சென்றீர்
திடுமென எம்மை விட்டே!
பூவிழந்தேன், பொட்டிழந்தேன்
பொற்றாலியும் இழந்தேன்
நானிங்கு வாழ்வு மகிழ்ந்தேன்
நற்றுணையை இழந்தேன்

கணவரே! நீர் முத்தி சேர
கடவுளை வேண்டுகின்றேன்
கடமைகள் செய்தேன் எனினும்
கண்ணீரே கடல் போலாச்சே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பர்

பலாலியில் இருந்தும் நாங்கள்
பலகாலம் வந்து விட்டோம்
மடிப்பாக்கம் சென்னையிலே
மரணித்தீர் அப்பாவே!

தந்தையிற் சிறந்ததோர் தந்தையானீர்
தரணி தனில் எமை நிமிர்ந்து வாழவைத்தீர்
சிந்தையில் நாமும்மைச் சிலையாய் வைத்தோம்
முந்தை வினை ஒழிந்து முத்தி பெற்றிடுவீர்

## மருமக்கள் புலம்பல்

மருமக்களாய் வந்தோம். மாமா என்றழைத்தோம்
மக்களாயே எம்மை வாழ வழி அமைத்தீர்
பெருமகனாய் உம்மை நாம் போற்றுகின்றோம்.
திருமகனாய் இன்று நீர் திருநிலை அடைந்தீரே!

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

தாத்தா தாத்தா எங்கே போனிங்கள்
அப்புச் சாமியுடன் அருகில் இருக்கவா?
சீத்தாவின் சின்னம்மாப் பாட்டி போல
சிவத்திலே மாட்டிய படத்தில் இருக்கவா?

## சகோதரர்கள் புலம்பல்

ஒருதாய் வயிற்றிற் பிறந்தோம்
உடன் பிறப்பாய் வளர்ந்தோம்
அறுவராய் ஓடி விளையாடினோம்
அண்ணன்மார் சென்ற வழி அங்கேதான் சென்றீரோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர்கள் புலம்பல்

மைத்துனர்கள் எம்மைநீர் மறந்தே விட்டீரோ
முத்தி பெறும் அவசரத்தில் முந்திச் சென்றீரோ
சித்தன் சிவனவனின் சீர்பாத சேவை தனில்
முத்தாய் ஒளி வீசி முழுமையால் விளங்கிடுவீர்

## உறவினர்கள் புலம்பல்

உற்றார் உறவினர் நாமெல்லாம் இங்கிருக்க
செற்றாரைச் தேடிச் சிவகதியைச் சேர்ந்தாயோ?
மற்றோர் நாமெல்லாம் (மடிப்பாக்கம்) வாழ்ந்திருக்க
வெற்றி பெற்றேனென்று வீடுபேறு அடைந்தீரோ

### தேற்றம்

பிறக்கும் போதும் தனியே வந்தோம்
இறப்பும் அதுபோல் தனி வழி தான்!
உறவும் பொருளும் உவந்திடு மெவையும்
மறைவின் பின்னே தொடராது
இன்றைக் கிருப்பார் நாளைக்கில்லை
எழுதும் விதியின் கதையிதப்பா
அக்கினி வாயில் உடலது வேகும்
ஆன்மா என்றும் அழியாது

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிடவூரின் வாழ்வே

அமுதீர் ஒருபாகம் அகலாத சுகபாணி

அருள்வாமி அபிராமியே

## கௌரி காப்பு

*விநாயகர் துதி*

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கணப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற் கா.

*வேண்டுதற் கூறு*

காப்பெடுக்க வந்தேன் கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடிந்திடுவாய்
பண்ணும் விணயாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக ணயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திருடவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளி தாயே
கொடிய மகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அரசுக் குணம் யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையவனைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகைபாற்றுப் படலமிதை வழி மதியாய்க் காட்டிடுவர்
நெறியறியாத் திகைப்போக்கு நெறியைக் காட்டிவாய்
காப்பைப் புனைந்துவிடு நுண்ணறிவு ஊட்டுவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைக் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளும்மா
வீடு செழிக்கவென்றே நற்காப்பு அருளும்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளும்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளும்மா
பூமணியே மாமணியே புனிதவகி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டைத் தேவியரே பராசக்தி தாயவளே

ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
பால், பழங்கள், வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவேர் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்தவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமச் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புச் கட்டிவிட்டுக் கடமை முடிந்தென்று
ஏம்பம் மிகவிட்டு என்று இருத்தறியேன்
நாளும் பொழுதிதெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப்பொழுதெந்து காப்பதனில் விழித்திடுவேன்.
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏற்ப்பவரைக் கண்டாலட எரிமலைபோற் கனன்றிடுவேன்.

தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்பக் கையிலிருந்து கண்திறந்து காட்டும்படி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள் வரையில் இனசைவொரு விரதமிகு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால் உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவல நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்
(சாந்தம் மன அமைதி பெற)

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன், இறைவன் அடி வாழ்க!
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தான் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி! எந்தை அடி போற்றி!
நேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி!
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்!
கண் நுதலான் தன் கருணைக் கண்காட்ட, வந்து எய்தி,
எண்ணுவதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி,
விண் நிறைந்து, மண்நிறைந்து, மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்து, எல்லை இலாதானே! நின் பெரும்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்!
பில்லாகிப் பூடாய்ப் புழுவாய், மரம் ஆகிப்
பல் விருகம் ஆகிப் பறவைவாய்ப் பாம்பு ஆகிக்,
கல்லாய், மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்,
வல் அசுரர் முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅநின்ற இத்தாவர சங்கத்துள்
எல்லாப் பிறப்பும் சிறந்து, இளைத்தேன், எம்பொருமானே?
மெய்யே உன்பொன் அடிகள் கண்டு, இன்று வீடு உற்றேன்!
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா! என ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமானன் ஆம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்த அருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி, மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!
ஆக்கம், அளவு, இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய்! காப்பாய்! அழிப்பாய்! அருள் தருவாய்!
போக்குவாய்! என்னைப் புகுவிப்பாய், நின் தொழும்பில்!
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தால் போலச்
சிறந்து, அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று,
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய், எம்பெருமான்! வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம், பவாம் என்னும் அரும் கயிற்றால் கட்டிப்
புறம் தோல் போர்த்து, எங்கும் புழு அழுக்கு மூடி,
மலர் சோரும் ஒன்பது வாயில் குழலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பு ஆகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்வி
நிலம் தன்மேல் வந்து அருளி, நீல்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசு அற்றஜோதி, மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே! தேன் ஆர் அமுதே! சிவபுரனே!
பாசம் ஆம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து, நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவு இலாப் பெருமானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீர் ஆய் உருக்கி, என் ஆர் உயிராய் நின்றானே!
இன்பமும், துன்பமும் இல்லானே! உள்ளானே!
அன்பருக்கு அன்பனே! யாவையும் ஆய், அல்லையும் ஆய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே! துன் இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம், நடு ஆகி அல்லானே!
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின்
நோக்கு அரிய நோக்கே! நுணுக்கு அரிய நுண் உணர்வே!
போக்கும், வரவும், புணர்வும் இல்லாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே! காண்பு அரிய பேர் ஒளியே!
ஆற்றி இன்ப வெள்ளமே! அத்தா! மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாயச், சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றம் ஆம் வையகத்தின் வெவ்வேகறே, வந்த அறிவு ஆம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உன் ஆர் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்பு
ஆற்றேன், எம் ஐயா! அரசனே ஓர் என்று என்றும்
போற்றிப் புகழ்ந்து இருந்து, பொய் கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்தது. வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்ட அழுக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென் பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓ! என்று
சொல்லற்கு அரியனைச் சொல்லித் திரு அடிக்கிழ்ச்
சொல்லியை பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ள, சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர் சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்லினைபோம், துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்(தே) ஓங்கும் நிட்டையுங்
கைகூடும். நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை
அமரரிடம் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிண யாட
மையல் நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த அய்யா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர்கடி கெடுத்த அய்யா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
அய்யும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிளியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொழி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணி முடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண்ட லமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷனமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பு
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராகவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகெணெ
மொக மொக மொக மொகன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசம்
லீலா லீலா லீலா விநோ தனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் கதிர்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வரும்பெறக் காக்க
பிமரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருகவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நானங் கையிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருகவேல் காக்க
கணைக்கால் முழங்கால் கதிர்வேல் காக்க
ஐய்விரல் அடியினை அருள்வேல் காக்க
கைகக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் காக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நற்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்தல் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்தன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ (டு) அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் செல்லவும் இடிவிழுந்(து) ஓடிட
ஆனை அடியினி அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிலும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காகம் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாள்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஒடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு  செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலேரி
தணலேரி தணலேரி தணவதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஒட
புலியும் நரியும் புன்நரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயிர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் வயித்தியம் வலிப்பும்ப் பித்தம்
சூலைசயம் கன்மம் சொக்குச் சிரங்க
குடைச்சல் சிலந்தி குடல் விப்புரிதி
பக்கப்பிளவை படர் தொடைவாழை
கடுவன் படவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லா தோட நீ எனக்கு அருள்வாய்
ஈரேஷ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணளாள் அரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே! சைலொலி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப்பாட
எனைத் தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க
வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க
வாழ்க! வாழ்க! மலைக்குரு மகளுடன்
வாழ்க! வாழ்க! வாரணத் துவசம்
வாழ்க! வாழ்க! என்வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துஉன்கடன்
பெற்றவன் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுஉன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம்என்ற அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத் துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பந்து ஆறுஉருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீறு அணிய
அஷ்டத்திற்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து உணவுஆகச்
சூர பத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்துஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்துஆட் கொள்ள எந்தனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

(கந்தசஷ்டி கவசம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பொற்சுண்ணம்

முத்துநற் றமாம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளு
நாமகளோடு பல்லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியுங்
கங்கையும் வந்துகவரிகொண்மி
னத்தனையாறனம் மானைப்பாடி
யாடப் பொற் சுண்ணமிடித்துநாமே 01

பூவியல்வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணமிடிக்க வேண்டு
மாவின் வடுவகிரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங்கோ னெங்கூத்தன்
றேவியுந்தானும் வந்ததெம்மையாளச்
செம்பொன் செய்சுண்ணமிடித் துநாமே (02)

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்திநிதிபரப்பி
யிந்திரன் கற்பகநாட்டி யெங்கு
மெழிற்சுடர் வைத்துக் கொடியெடுமி
னந்தரர் கோனயன்றன் பெருமா
னாழியானாதனல் வேலன்றாதை
யெந்தரமாளுமையாள் கொழுந்நற்
கேய்ந்த பொற்சுண்ணமிடித் துநாமே 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணிமின்களுலக்கை யெல்லாங்
காம்பணிமின்கள் கறையுரலை
நேசமுடைய வடியவர்க
ணின்றுலாவுகவென் றுவாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந்தாடுங் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித் துநின்று
பாடிப் பொற்சுண்ணமிடித் துநாமே 04

அறுகொடுப்பாரய னும்மரியு
மன்றிமற்றிற் திரனோடமரர்
நறுமுறுதேவர் கணங்களெல்லா
நம்மிற்பின்பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடைமும்மதி லெய்தவில்லி
திருவேகம்பன் செம்பொற்கோயில்பாடி
முறுவற் செவ்வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணமிடித் துநாமே 05

உலக்கைபலவோச் சுவார்பெரிய
ருலகமெலாமுரல் போதாதென்றே
கலக்கவடியவர் வந்துநின்றார்
காணவுலகங்கள் போதாதென்றே
நலக்கவடியோமையான் டுகொண்டு
நாண்மலர்ப்பாதங் கள்கூடத் தந்த
மலைக்குருமகருமகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற்சுண்ணமிடித் துநாமே 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந்தோள்வளையார்ப் பவார்ப்பத்
தொண்டர்குழா மெழுந்தார்ப்பவார்ப்ப
நாடவர்நந்தம்மையார்ப் பவார்ப்ப
நாமுமவர்தம்மை யார்ப்பவார்ப்பப்
பாடகமெல்லடி யார்க்குமங்கை
பங்கினனெங்கள் பராபரனுக்
காடகமாமலை யன்னகோவுக்
காடப்பொற்சுண்ணமிடித் துநாமே 07

வாட்டங்கண் மடமங்கைநல்லீர்
வரிவளையார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிருமுண்டந் துதைந்திலங்கச்
சோற்றெம்பிரானென் றுசொல்லிச்சொல்லி
நாட்கொண்டநான் மலர்ப்பாதங்காட்டி
நாயிற்கடைப்பட்ட நம்மையிம்மை
யாட்கொண்ட வண்ணங் கள்பாடிப்பாடி
யாடப்பொற்சுண்ணமிடித் துநாமே 08

வையகமெல்லா முரலதாக
மாமேருவென் னுமுலக்கைநாட்டி
மெய்யனுமஞ் சணிறையவட்டி
மேதகுதென்னன் பெருநதுறையான்
செய்யதிருவடி பாடிப்பாடிச்
செம்பொன்னுலக் கைவலக்கைபற்றி
யையனணிதில்லைவாண னக்கே
யாடப்பொற்சுண்ணமிடித் துநாமே 09

முத்தணிகொங் கைகளாடவாட
மொய்குழல் வண்டினமாடவாடச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தஞ்சிவனோடு மாடவாடச்
செங்கயற்கண் பனியாடவாட
பித்தெம்பிரா னொடுமாடவாடப்
பிறவிபிற ரொடுமாட வாட
வத்தன்கருணை யொடாடவாட
வாடப்பொற்சுண்ணமிடித் துநாமே 10

மாடுநகைவாணிலா வெறிப்ப
வாய்திறந்தம் பவளந்துடிப்பப்
பாடுமினந்தம் மையாண்டவாறும்
பணிகொண்டவண் ணமும்பாடிப்பாடித்
தேடுமினெம் பெருமானைத்தேடிச்
சித்தங்களிப்பத் திகைத்துத்தேறி
யாடமினம்பலத் தாடினானுக்
காடப்பொற்சுண்ணமிடித் துநாமே 11

மையமர்கண்டனை வானநாடர்
மருந்தினைமாணிக் கத்கூத்தன்றன்னை
யையனையையர் பிரானைநம்மை
யகப்படுத்தாட் கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம்பொய் யனை மெய்யாமெய்யைப்
போதரிக்கண்ணினைப் பொற்றொடித்தோட்
பையரவல்குன் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித் துநாமே 12

மின்னிடைச்செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப்பண்ணமர் மென்மொழியீ
ரென்னுடையாரமு தெங்களப்ப
னெம்பெருமானிமவான் மகட்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைக்கேள்வன் மகன்றகப்பன்
றமையனெம்மையன் றாள்கள்பாடிப்
பொன்னுடைப்பூண் முலைமங்கைநல்லீர்
பொற்றிருச்சுண் ணமிடித் துநாமே 13

சங்கமரற்றசிலம் பொலிப்பத்
தார்குழல்சூழ தருமாலையாடச்
செங்கனிவாயிதழுந் துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம்பாடிக்
கங்கையிரைப் பவராவிரைக்குங்
கற்றைச்சடை முடியான்கழற்கே
பொங்கியகாதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச்சுண் ணமிடித் துநாமே 14

ஞானக்கரும்பின் றெளிவைப்பாகை
நாடற்கரியநலத் தைநந்தாத்
தேனைப்பழச் சுவையாயினானைச்
சித்தம்புகுந் துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தானைநாத் தழும்பேற வாழ்த்திப்
பானற்றங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண் ணமிடித் துநாமே 15

ஆவகைநாமும் வந்தன்பர்தம்மோ
டாட்செயும்வண்ணங் கள்பாடிவிண்மேற்
றேவர்கனாவிலுங் கண்டறியச்
செம்மலர்ப்பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகமேந்திய வெல்கொடியான்
சிவபெருமான் புரஞ்செற்றகொற்றச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகனாகமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணமிடித் துநாமே 16

தேனகாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம்பாடித் திருச்சடைமேல்
வானகமாமதிப் பிள்ளைபாடி
மால்விடைபாடி வலக்கையேந்து
மூனகாமழுச் சூலம்பாடி
யும்பருமிம் பருமுய்யவன்று
போனகாமாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச்சுண்ணமிடித் துநாமே 17

அயன்றலைகொண்ட செண்டாடல்பாடி
யாருக்கனெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக்கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக்காலாறுதைத்தல்பாடி
யியைந்தனமுப்புர மெய்தல்பாடி
யேழையடி யோமை யாண்டுகொண்ட
நயந்தனைப்பாடி நின்றாடியாடி
நாதற்குச் சுண்ணமிடித் துநாமே. 18

வட்டமலர்க் கொன்றைமாலைபாடி
மத்தமும் பாடிமதியும்பாடிச்
சிட்டர்கள்வாழுந் தெனறில்லைபாடிக்
சிற்றம்பலத் தெங்கள் செல்வம்பாடிக்
கட்டியமாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மே
லிட்டுநின்றாடு மரவம்பாடி
யீசற்குச்சுண்ணமிடித் துநாமே 19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும்வேள் வியுமாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையுமாயினார்க்குச்
சோதியுமாயிருளா யினார்க்குத்
துன்பமுமாயின் பமாயினார்க்குப்
பாதியுமாயமுற்று மாயினார்க்குப்
பந்தமுமாய் வீடுமாயினாருக்
காதியுமந்தமு மாயினாருக்
காடப்பொற்சுண்ண மிடித் துநாமே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்பு நிறை பண்பாளனாய் வாழ்ந்து உறவுகளுக்கு விருட்சமாய் நிழல்தந்து இமயமென உயர்ந்து வளிகாட்டிய பாசமிகு தந்தையின் மரணச்செய்தி அறிந்து நீண்ட நாட்கள் நினைவுத்துயர் பகிர்ந்தோருக்கும்,

எங்களோடு இணைந்து உதவி செய்தோர்க்கும் அன்பின் துயரை சுமந்து தேம்பி நிற்கும் உறவுகளுக்கும் துயரைப் பகிர்ந்து ஆறுதல் கூறியோருக்கும்

தொலைபேசி, தொலைநகர், தபால், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், 31-வது நாள் அந்தியேட்டி சபிண்டி கிரிகைகளில் கலந்து கொண்டு நிகழ்வை நடாத்தி உதவிய உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எம் இனியவரின் நினைவுகளோடு இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நன்றி

இங்ஙனம்

**துணைவி, பிள்ளைகள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**உறவுகள்**


மடிப்பாக்கம்
சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

युत्थानमधर्मस्य तदाऽऽत्मानं सृजाम्यहम् ॥



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையதை எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்

எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது

எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதாகிறதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது

மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org